உங்கள் வாழ்க்கையில் என்றோ ஒருநாள் வரும் அந்த மறக்கமுடியாத நிகழ்ச்சிகளை என்றும் உயிரோவியமாக வீடியோ படம்பிடித்திட நாடுங்கள்'
ஸ்ராரா
வீடியோ கொம்பிளெக்ஸ்
'ராஜ்-கொற்' தபால்கந்தோரடி கோண்டாவில் கிழக்கு கோண்டாவில்.

# உதயன்

விலை ரூ-1/=

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

STAR VIDEO COMPLEX
Any Functions at your Home ? Remember this name for VIDEO RECORDING
'RAJ-COT,' NEAR POST-OFFICE KONDAVIL EAST, KONDAVIL

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆவ கார்த்திகை மீ 14 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ற.அவ்வல் பிறை 16 (29-11-1985) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:- 3

### இருபத்து இரண்டாயிரம்

# தமிழ் அகதிகளுக்கு அரச உதவி இல்லை

**யாழ்ப்பாணம், நவ 29**

**யாழ்ப்பாணத்தில் தஞ்சம் அடைந்துள்ள சுமார் 22,000 தமிழ் அகதிகளுக்கு அரசாங்கம் வேண்டிய உதவிகளைச் செய்யவில்லை. அரை வயிற்றுக்கும் உணவு சமைக்கப் போதாத அரிசி, மா தவிர வேறு எதையுமே அது வழங்கவில்லை.**

**தொண்டர் நிறுவனங்களே அவர்களது உயிர்களைப் பிடித்து வைத்திருக்கின்றன.**

இங்குள்ள அகதிகளுக்கு உதவிகள் செய்யுமாறு, சம்பந்தப்பட்டவர்கள் பலமுறை மேலிடத்திற்கு வேண்டுகோள் விடுத்தும் அது "செவிடன் காதில் ஊதிய சங்காகப்" போய்விட்டது.

திருகோணமலை, வவுனியா மற்றும் வெளி மாவட்டங்களைச்சேர்ந்த 5357 தமிழ்க்குடும்பங்கள் அகதிகளாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் தங்கியுள்ளன.

இவற்றில் 3046 குடும்பங்கள் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவை. வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவை 2231 குடும்பங்கள். ஏனைய மாவட்டங்களில் இருந்து 80 தமிழ் குடும்பங்களும் யாழ்ப்பாணம் வந்துள்ளன.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டும் 1369 திருகோணமலை அகதிக்குடும்பங்கள் தங்கியிருக்கின்றன.

திருமலைமாவட்டத்தில் 54 கிராமங்களிலிருந்து தமிழ் அகதிகள் வந்துள்ளனர்.

திருமலைப் பட்டினத்தில் இருந்து மட்டும் 1411 குடும்பங்கள் வந்துள்ளன, வவுனியா மாவட்டத்தில் 94 கிராமங்களில் இருந்து அகதிகள் வந்துள்ளனர்.

வவுனியா பட்டினத்திலிருந்து 1017 தமிழ்க் குடும்பங்கள் வந்துள்ளன.

தற்சமயம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அகதிகளாக தங்கியுள்ள தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 22,000. இதில் பெண்கள், குழந்தைகளும் அடங்கும். அகதிகளுக்குத் தேவையான உணவு. உடை முதலியவற்றை பொதுநலஸ்தாபனங்களே முன்வந்து வழங்குகின்றன.

அரசாங்கத்தின் சார்பில் அரிசி, மா, சீனி மட்டுமே கூட்டுறவுச் சங்கக்கடைகள் மூலம் வழங்கப்படுகின்றன.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிலையம் 1000 துணிப்பார்சல்களையும் 1 குடும்பத்திற்கு 1 பைக்கட் என்ற வீதம் பால்மாவையும் வழங்குகின்றது.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் 400 துணிப்பார்சல்களையும் 1300 பால்மாபைக்கட்டுகளையும் வழங்கியுள்ளது.

எவ். ஆர். எஸ். எஸ். ஸ்தாபனம் 2000 துணிப்பார்சல்களையும் 2000 பால்மாபைக்கட்டுக்களையும் வழங்கியுள்ளது.

மனித அபிவிருத்தி நிலையம் 550 துணிப்பார்சல்களை ஊர்காவற்றுறை, கரவெட்டிப் பகுதிகளில் உள்ள தமிழ் அகதிகளுக்கு வழங்கமுன் வந்துள்ளது.

தென் இந்திய திருச்சபையும் உதவ முன்வந்துள்ளது. ஒக்ஸ்போம் நிறுவனமும் அகதிகளுக்கு உதவமுன்வந்துள்ளதாக அறிவித்து உள்ளது.

### முச்சந்திமுரசி

அடடே, அதுதானே காதலுக்கு கண்ணில்லை எண்டு எங்கடை பெரியவங்கள் சும்மாவே சொல்லி வைச்சவை?

### வந்தாறுமூலையில் காஸ் சிலிண்டர் கொள்ளை

மட்டக்களப்பு, நவ. 29

வந்தாறுமூலை பல்கலைக்கழக கல்லூரிக்குச் சொந்தமான நான்கு காஸ் சிலிண்டர்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் நடந்தது.

இனந்தெரியாத கோஷ்டி ஒன்று காவலாளியைக் கட்டிப்போட்டு விட்டு இக்கொள்ளையை நடத்தியது.

### மீன்பிடி வள்ள இயந்திரங்கள் அபகரிப்பு

மட்டக்களப்பு, நவ. 29

புன்னைக்குடாவில் தனியாருக்குச் சொந்தமான மீன்பிடி வள்ளம் ஒன்றில் இருந்த இரண்டு இயந்திரங்கள் இனந்தெரியாத நபர்களினால் கொள்ளையடிக்கப்பட்டன.

இச்சம்பவம் கடந்த புதன் இரவு இடம்பெற்றது.

### சுபநேரம்

29- 11- 1985

சுபநேரம்:

6. 14 முதல் 7. 44 வரை

ராகுகாலம்:

10.44முதல் 12.13 வரை

### உதயனின் வாரஇதழ் சஞ்சீவி

# கீழக்கில் நேற்று 40 தமிழர் பலி!

**மூதூர்:-16 மண்டூர்:-24**

திருகோணமலை நவ. 29

திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர், கட்டைபறிச்சான் பகுதிகளில் பதினாறு தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

நேற்றுக் காலை இப்பகுதிகளில் ஆயுதப் படையினர் நடத்திய தேடுதல் வேட்டையின்போதே இவர்கள் உயிரிழந்தார்கள்.

சம்பூர், கட்டைபறிச்சான் கிராமங்கள் மூதூர் தொகுதியில் உள்ளன.

தகவல் ஒன்றைத் தொடர்ந்து ஆயுதப் படையினர் தேடுதல் வேட்டை நடத்த சம்பூர் கிராமத்திற்குச் சென்றார்கள்.

தேடுதல் வேட்டையின்போது ஏற்பட்ட மோதலில் பல பாதுகாப்புப்படை வீரர்கள் காயமடைந்தனர்.

அவர்களில் சிலர் திருமலை கடற்படை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த மோதலின் பின்னர் தேடுதல் வேட்டை தீவிரமாக்கப்பட்டது.

அப்போது பத்து பொதுமக்கள் கொலையுண்டனர்.

வாவி ஒன்றில் இறால் பிடித்துக் கொண்டிருந்த பத்து பொதுமக்களே இப்படி இறந்தவர்கள் என்று கூறப்படுகின்றது.

கத்தரித் தோட்டம் ஒன்றில் கைவிடப்பட்ட ஜீப் ஒன்றையும் வான் ஒன்றையும் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர்.

வாகனங்கள் பின்னர் எரிக்கப்பட்டதாக அறிய வந்துள்ளது.

இதனிடையில் கூவித் தீவு, சேனையூர், சம்பூர் ஆகிய கிராமங்களில் பல வீடுகள் எரிக்கப்பட்டன என்றும் தகவல்கள் வந்துள்ளன.

சம்பூரைச் சேர்ந்த பலர் விசாரணைக்காக ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டைபறிச்சானில் நடைபெற்ற மற்றொரு சம்பவத்தில் ஆறு தமிழர்கள் ஆயுதப்படையினரால் நேற்றுக்காலை கொலையுண்டனர்.

மண்டூர், நவ 29

மண்டூரில் இருபத்து நான்கு தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்.

ஆயுதப் படையினரின் தேடுதலுக்கு அஞ்சி தப்பிஓடிய பொது மக்களே கொல்லப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை அதிகாலை நான்கு மணியளவில் மண்டூர் கிராமம் ஆயுதப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது.

பலத்த தேடுதலில் வீரர்கள் ஈடுபட்டனர்.

அச்சம் கொண்ட பொதுமக்கள் அயற்கிராமங்களுக்கு தப்பி ஓடினார்கள். வீடுகள் யாவும் வெறிச்சோடிக் கிடந்தன.

இப்படி தப்பி ஓடியவர்களே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்கள்.

பாதுகாப்பைத் தேடி குருமண்வெளி கிராமத்துக்கு வள்ளம் ஒன்றில் தப்பிச் செல்கையில் அவர்கள் உயிரிழந்தனர்.

வள்ளத்தில் வாவியைக் கடந்து கொண்டிருக்கையில் வானத்திலிருந்து அவர்கள் மீது குண்டுமாரி பொழிந்தது. ஹெலிகொப்டரில் இருந்து தீர்க்கப்பட்டவேட்டுகளுக்கு அவர்கள் பலியாகினர்.

இந்த தேடுதல் வேட்டையின்போது இரண்டு வீடுகளும் மண்டூர்பழைய தபால் கட்டடமும் குண்டு வைத்து தகர்க்கப்பட்ட பின்னர் எஞ்சிய பகுதிகள் எரிக்கப்பட்டன.

டிராக்டர் ஒன்றும் அங்கு எரிந்த நிலையில் கிடந்தது.

பல வீடுகள் தீக்கிரையாகின.அப்பகுதி மயானம்போல் காட்சியளிக்கிறது. கால்நடைகள் கூட இறந்து கிடக்கின்றன. வீதிகள், ஒழுங்கைகளில் ஆங்காங்கே பல சடலங்கள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மண்டூரில் படுகொலை செய்யப்பட்டவர்கள் தீவிரவாதிகள் எனபாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

### டெலிவிஷனில்...

யாழ்ப்பாணம்,நவ.29

சிங்கப்பூரில் இருந்து வந்த ஒருவரின் டெலிவிஷன் பெட்டிக்குள் 18 வாக்கிடோக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

நேற்றுக்காலை கட்டுநாயக்கா விமன நிலையத்தில் சுங்க அதிகாரிகள் இதனைக் கண்டுபிடித்தனர்,

சந்தேக நபரான தமிழர் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

### ★ அதிகாரி தப்பினர்!

யாழ்ப்பாணம்,நவ. 29

யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் உயர்தர பொலிஸ் அதிகாரி ஒருவர், கடத்தப்படுவதிலிருந்து தெய்வாதீனமாகத் தப்பினர்.

அவரது வசிப்பிடத்துக்கு ஒரு கோஷ்டி நேற்று இரவு சுமார் 7.30 மணியளவில் சென்றது. அந்தக் கோஷ்டியினர் ஆயுதபாணிகளாகவே சென்றனராம். அவர்களைக் கண்டதும் உயர் அதிகாரியின் பிள்ளைகள் அழுது குளறினராம்.

அதேவேளை, அந்த அதிகாரியுடன் பணிபுரியும் மற்றொரு அதிகாரி தமது வீட்டிலிருந்து தொலைபேசியைச் சுழற்றி நண்பரான (கடத்தப்பட இருந்த) அதிகாரிக்கு வேறு விடயமாகக் கதைக்க முயன்றாராம்.

தொலைபேசி மணி அடிப்பதைக் கேட்ட கோஷ்டியினர் தமது முயற்சியைக் கைவிட்டுச் சென்றதாக அறியவருகிறது. அதனால் அதிகாரி தப்பினர்.

### கடத்தப்பட்ட சார்ஜன்ட் விடுவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

கடந்த 20-ம் திகதி யாழ் ரயில் நிலையத்தில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்ட பொலீஸ் சார்ஜன்ட் சதாசிவகுமார் புதன்கிழமை இரவு கோப்பாய்க்கு அருகில் விடுவிக்கப்பட்டார்.

### படை வீரரின் உயிர் காத்த தமிழ்க்காதலி!

யாழ்ப்பாணம், நவ. 29

காரைநகரில் கடத்தப்பட்ட கடற்படை வீரரின் உயிரை அவரது தமிழ்க் காதலி காப்பாற்றினர்.

காரைநகர் கடற்படை முகாமைச் சேர்ந்த தர்மசிறி என்ற வீரரே இவ்வாறு காப்பாற்றப்பட்டவராவார். இவர் மகியங்கனையைச் சேர்ந்தவர் கடந்த வாரம் இனந்தெரியாத இளைஞர்களினால் கடத்தப்பட்டார்.

தனது காதலியைச் சந்திப்பதற்காக முகாமைவிட்டு வெளியே வந்தபோதே இது நடைபெற்றது.

கடத்திய இளைஞர்கள் இவரை விசாரணை செய்த பின்னர் அவருக்கு மின்கம்ப மரணதண்டனை வழங்க முடிவு செய்தனராம்.

ஆனால் தர்மசிறியின் காதலி முந்திக் கொண்டார். வேறு ஒரு இளைஞர் கோஷ்டியை இந்த விடயத்தில் தலையிட வைத்தார், அதன் மூலம் காதலன் விடுவிக்கப்பட்டார்.

நேற்று தர்மசிறியை அவரது காதலியின் தந்தையார் யாழ் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தார்.

## தமிழ் அகதிகள் பிரச்சினையில் அரசு மாற்றுந்தாய் போக்கு

### அகதிகள் மாநாட்டில் பிரஜைகள் குழு செயலாளர்

யாழ்ப்பாணம், நவ 29.

தமிழ் அகதிகள் பிரச்சினையில் அரசாங்கம் மாற்றுந்தாய் மனப்பான்மையுடன் செயற்படுகிறது.

யாழ் பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி ஆர், பாலசுப்பிரமணியம் இவ்வாறு குற்றஞ்சாட்டினர்.

வன்செயலால் பாதிப்புற்று இடம் பெயர்ந்த அகதிகள் மாநாட்டில் சிறப்புரை ஆற்றும் போது அவர் இவ்வாறு கூறினர்.

மகளிர் பேரவையின் ஆதரவில் யாழ். வை. எம். சி. ஏ மண்டபத்தில் நடைபெறும் மூன்று நாள் மாநாட்டுக்குச் செல்வி கே. மேகலா சுலைமை வகித்தார்.

திரு. பாலசுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

சகல இனங்களையும் சமமாக நடத்துவதாக இலங்கை அரசு உலகுக்கு கூறுகிறது.

ஆனால் பல துறைகளிலும் தமிழ் மக்களை அரசாங்கம் புறக்கணிக்கிறது. அதே போன்று அகதிகள் பிரச்சினையில் கூட தமிழர் சிங்களவர் என்ற பாகுபாடு காண்பிக்கப்படுகிறது.

தென்னிலங்கை அகதிகளுக்குக் கிடைக்கும் நிவாரணங்கள் யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்துள்ள அகதிகளுக்குக் கிடைப்பதில்லை. அகதிகள் பிரச்சினை இனப்பிரச்சினை அல்ல. அது மனிதாபிமானப் பிரச்சினை என்பதை அரசு உணர வேண்டும்.

அகதிகள் தமக்கு இழைக்கப்பட்ட கொடுரங்களை இங்கு விளக்கிக் கூறினார்கள், கேட்கக் கேட்க மனங்கலங்கினோம்.

நோயாளர்கள், இறந்தவர்களைக் காணச் சகிக்காத அருளுள்ளம் கொண்டவர் புத்தர் பிரான். அவர் போதனையைப் பின்பற்றும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்த நாட்டிலா இப்படியான கொடுமைகள் நிகழ்கின்றன என்று உலகமே வியக்கிறது.

சர்வதேச ஸ்தாபனங்கள்உலக செஞ்சிலுவைச் சங்கம் ஆகியன இங்கு நேரில் வந்து அகதிகளைப் பார்த்து உதவ வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

உலக இயக்கங்களின் ஆதரவை இம்முயற்சியில் திரட்ட பிரஜைகள் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு திரு. பாலசுப்பிரமணியம் உறுதி கூறினர்,

திரு. எஸ். முருகையா பேசும்போது, வன்செயல் பாதிப்பினால் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்துள்ள அகதிகளின் அவலத்தை உலக நாடுகளின் கவனத்தை கவரச் செய்வோம். உலக அபிப்பிராயத்தை உருவாக்குவோம் என்றார்.

# மின் கம்பத்தில் கட்டப்பட்ட இருவர் இளைஞரால் விடுவிப்பு

### சுன்னாகத்தில் மீண்டும் வீதித்தடை, கடை அடைப்பு

சுன்னாகம், நவ. 29

சுன்னாகத்தில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து பொதுமக்களினால் மின் கம்பத்தில் கட்டப்பட்டிருந்த இருவர் இளைஞர் கோஷ்டி ஒன்றினால் நேற்று மீட்டுச் செல்லப் பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்தை ஆட்சேபித்து நேற்று சுன்னாகத்தில் மீண்டும் வீதித் தடைகள் போடப்பட்டன. 5 இடங்களில் பொதுமக்கள் தடைகளை ஏற்படுத்தி இருந்தனர். கடை அடைப்பும் நேற்று நடந்தது.

சம்பவம்பற்றி கூறப்படுவதாவது:

சுன்னாகம் பெரிய மதவடியைச் சேர்ந்த இளைஞர் நடராசா குமரேசன் திங்கட்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இவரின் சடலம் சந்தன வைரவர் கோவிலடியில் கிடந்து கண்டுபிடிக்கப்பட்டது.

இச்சம்பவத்தை ஆட்சேபித்து சுன்னாகம் பொதுமக்கள் சடலத்தையும் கிடத்தி வைத்துக்கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்,

இளைஞனை கொலை செய்தோர் அதற்கு உரிமை கோரவேண்டும் என்றும், கொலைக்கான காரணத்தை தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டு அதற்கு புதன் நள்ளிரவு வரை பொதுமக்கள் அவகாசம் கொடுத்தனர். வீதித் தடைகளும் போடப்பட்டன. கடை அடைப்பும் நடந்தன.

எனினும் எவரும் அதற்கு உரிமை கோரமுன்வரவில்லை.

இந்நிலையில் நேற்று வியாழக்கிழமை இருவர் சுன்னாகம் மக்கள் வங்கிக்கு அருகில் மின் கம்பத்துடன் கட்டப்பட்டனர். குமரேசனைக் கொன்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் இயக்கம் ஒன்றால் கட்டப்பட்டனர்.

பொதுமக்கள் பார்க்கக்கூடியதாகஉயரமான ஓர் இடத்தில் இவர்கள் உயிருடன் கட்டப்பட்டிருந்தனர்.

இவர்கள் பிடிபட்டதை அடுத்து ஏற்கனவே போடப்பட்டிருந்த வீதித் தடைகளை மக்கள் அகற்றியிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலை சுமார் பத்தரை மணிக்கு திடீர் என அங்கு வந்த இனந்தெரியாத மற்றொரு இளைஞர் கோஷ்டி ஒன்று ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்து பொதுமக்களை அங்கிருந்து விரட்டியது.

பின்பு மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்த இருவரையும் அவர்கள் விடுவித்து கடத்திச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தினால் ஆத்திரம் அடைந்த பொதுமக்கள் மீண்டும் நேற்று வீதித் தடைகளைப் போட்டனர்.

இயக்கங்கள் குமரேசனின் மரணம் குறித்து விசாரணை செய்து உண்மைக் கொலையாளிகளைக் கண்டுபிடித்து தண்டனை வழங்கும்வரை வீதித் தடைகள் அகற்றப்படமாட்டா என்று தரிவிக்கப்பட்டுள்ளது.

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தஞ்சம் அடைந்த இந்தியரை கனடா திருப்பி அனுப்பும்

புதுடில்லி, நவ 28

பஞ்சாப்பில் அரசியல் நெருக்கடி தணிந்து வருகின்றது. எனவே கனடாவில் அரசியல் அடைக்கலம் புகுந்துள்ள இந்தியப் பிரஜைகளை அவர்களின் நாட்டுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை கனேடிய அரசு மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கனேடிய வெளிநாட்டமைச்சு அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

பஞ்சாப் நெருக்கடியைத் தணிக்க பாரத அரசு எடுத்த நடவடிக்கைகளால் அங்கு நிலைமைகள் சீரடைந்து வருகின்றன. அரசியல் தஞ்சம் கோரி இங்கு வந்தவர்களை அரசு திருப்பி அனுப்ப வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவுக்கு வரும் அகதிகள் தொடர்பான பிரச்சினைகளில் 1984. ஆம் ஆண்டு இடைக்கால தடையுத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கனேடிய அரசு இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் 2,800 இந்திய பிரஜைகள் இதனால் பாதிப்படையலாம்.

## பேயாக உயிர் குடிக்கிறது போபால் விஷவாயு

### மக்கள் இன்றும் இறக்கிறார்கள்!

போபால், நவ 28

போபால் விஷவாயுச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும் இறந்து கொண்டிருக்கின்றார்கள்.

1984ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் திகதி போபால் விஷவாயு ஒழுக்குச் சம்பவம் இடம் பெற்றது.

உத்தியோக தகவலின்படி இச்சம்பவத்தில் 1,754 பேர் இறந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால் 2,500 பேர்களுக்கு மேல் இறந்தனர் என்பது பொதுவான கணக்கு.

ஆனால் ஒரு வருடம் சென்றும் பாதிக்கப்பட்டு உயிர் தப்பியவர்களில் சிலர் இன்னும் இறந்து கொண்டிருக்கின்றார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலையில் இருந்து இதுவரை 40 பேர்வரையில் இப்படி இறந்து விட்டார்கள் என்று பேராசிரியர் ஆர். என். பண்டாரி தெரிவித்துள்ளார்.

பயங்கர விஷவாயுச் சம்பவம் இடம்பெற்று ஓர் ஆண்டு சென்றும் போபால் நகரம் இன்னும் அதிர்ச்சியும் பதற்றமும் நிறைந்த இடமாகத்தான் காட்சியளிக்கிறது.

3 லட்சத்து 20 ஆயிரம் மக்களில், 80,000 குடும்பங்கள்வரை விஷவாயுவினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று கணக்கிடப்பட்டு உள்ளது.

## குளிர் வாட்டுகிறதா? சூடுதர மாடுகள்

பிராங்போட் நவ. 28

மாரிகாலம் - உங்களைக்குளிர் வாட்டுகின்றதா?

பயப்படாதீர்கள். ஒரு பட்டி மாடுகளை வளர்த்து வாருங்கள்.

குளிர் உங்களை வாட்டாது, இப்படி நாம் சொல்லவில்லை.

மேற்கு ஜெர்மன் மின்சக்தி அமைப்பு இப்படி ஆலோசனை வழங்கியுள்ளது.

அமைப்பின் பொறியியலாளர்கள் கூறுவதாவது:-

ஒரு வீட்டைச் சூடாக வைத்திருக்கக் கூடிய அளவு உஷ்ணத்தை 20 மாடுகள் தருகின்றன.

அதன் மூலம் 900 கலன் எரிபொருளை ஒரு ஆண்டில் சேமிக்க முடியும்.

அரைத்தொன் எடையுள்ள ஒரு மாடு இரவுக்கும் பகலுக்கும் தேவையான 1,200 வாட்ஸ் உஷ்ணத்தை வெளியே விடுகின்றது- இப்படி அந்த பொறியியலாளர்கள் கூறியிருக்கின்றார்கள்.

## புதுமுகம் சுவாதி பல மொழி பேசுகிறார்

நிருமா கிரியேஷன்ஸ் இராம. பாண்டியனின் "திறமை" படத்தில் நடித்து வரும் புதுமுகம் சுவாதி தனது பல மொழி பேசும் திறமையைப் பெருமையாகக் கூறுகிறார்.

"தமிழ்த் திரையுலகிற்கு நான் அறிமுகமாகக் காரணமாக இருந்தவர் நடிகை சரோஜா தேவி ஆவார். அவருடைய பொர்சில்தான் இந்தப் படத்தில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

"தமிழில் இதுவே எனக்கு முதல் படமாகும். இதில் ரவீந்தருக்கு ஜோடியாக நடித்திருக்கிறேன். ஆரம்பத்தில் தமிழ் பேச மிகவும் சிரமமாக இருந்தது. தற்பொழுது தெளிவாகப் பேசி நடிக்கிறேன்.

தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் போன்ற மொழிகள் சரளமாகப் பேச முடியும்". இப்படிக் கூறினார் சுவாதி.

## திரை சினிமா

### சிலுக்கு தெலுங்கில் படு "பிஸி"

தெலுங்குப் படவுலகில் சிலுக்கு சுமிதா படு 'பிஸி' யாக நடித்துக் கொண்டிருக்கிறார். அதுவும் கதாநாயகியாக 10 படங்களுக்கு மேல் நடித்துக் கொண்டிருக்கிறார்.

இதைவிட ஹிந்திப் படவுலகு மீதும் இவருக்கு திடீரென நாட்டம் ஏற்பட்டுள்ளது.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளப் படங்களில் நடித்து, வயது வித்தியாசமின்றி அனைத்து ரசிகர்களையும் கவர்ந்து விட்டவர் சிலுக்கு.

### தியாகராஜன் எம்.ஜி.ஆரின் விசிறி!

"எனக்கு விருப்பமான நடிகர் ஒருவர் உண்டென்றால் அவர் மக்கள் திலகம் எம். ஜி. ஆர் ஒருவரே தான்" எனக் கூறுகிறார் தியாகராஜன்.

எக்காலத்திற்கும்ஏற்ற நடிப்பை வழங்கிய ஒரே நடிகர் புரட்சித் தலைவர் தான். அவருடைய பாணியை பின்பற்றும் நடிகர்கள்தான் தமிழ்ப் படவுலகில் நிலைத்து நிற்கிறார்கள். மக்களிடத்திலே அவர் உண்மையான அன்பை வைத்திருந்தார். அதைத்தான் படங்களிலும் பின்பற்றினார்.

அவருடைய பாணியைத் தான் இன்று நானும் பின்பற்றி வருகிறேன். இவ்வாறு மிகப் பெருமையாகக் கூறிக் கொள்பவர் தியாகராஜன்.

## "சார்க்" மாநாடு உறவைச் சீராக்கும்

டாக்கா, நவ 28

தென் ஆசிய நாடுகளுக்கு இடையே உறவுகளைச் சீராக்க உச்சிமாநாடு உதவும்.

இப்படி பங்களாதேஷ் வெளிநாட்டமைச்சர் ஹுமாயூம் ரஷீத் சௌத்ரி சொன்னார்.

'சார்க்' அமைப்பில் உள்ள 7 நாடுகளில் உள்ள 100 கோடி மக்கள் வறுமையில் வாடுகின்றனர்.

இதற்கு எதிராகப் போராடுவதே எம்மை எதிர்நோக்கியுள்ள பெரும் சவால்-என்று அமைச்சர் சௌத்ரி செய்தியாளர்களிடம் சொன்னார்.

## வெளி உலகில்

'சார்க்' மாநாட்டில்

### பெண்கள் நடனம் இடம்பெறுது

#### பங்களாதேஷ் ஜனாதிபதி உறுதி

டாக்கா நவ. 28

தென் ஆசிய பிராந்திய நாடுகளின் தலைவர்கள் டாக்கா வரும் போது இடம் பெறும் கலாசார நிகழ்ச்சிகளில் இளம் பெண்களின் நடன நிகழ்ச்சிகள் இடம்பெறு.

பங்களாதேஷ் ஜனாதிபதி முகமது எர்ஷாட், தன்னைச் சந்தித்த இஸ்லாமிய அடிப்படை இயக்கத் தூதுக்குழுவினரிடம் மேற்கண்ட உறுதி மொழியை அளித்தார்.

டிசம்பர் 7 ஆம் திகதி உச்சிமாநாடு டாக்காவில் ஆரம்பமாகின்றது.

இந்தியா, பாகிஸ்தான் இலங்கை,நேபாளம், பூட்டான், மாலைதீவு ஆகிய நாடுகளின் தலைவர்கள் இம் மாநாட்டில் பங்கு பற்றுகின்றனர்.

தலைவர்களை வரவேற்கும் நிகழ்ச்சிகளில் பங்கு பற்ற வைப்பதற்காக பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படுவதாக பங்களாதேஷின் சமய, அரசியல் குழுக்கள் எழுப்பிய பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி பதிலளித்தார்.

இவை எல்லாம் அவமதிப்பு ஏற்படுத்தும் பிரசாரம் என்று சொன்ன ஜனாதிபதி, இஸ்லாமிய நடைமுறைகளுக்கு எதிராக எதுவும் நடைபெற இடமளிக்கப்படமாட்டா என்றார்

### கன்ராக்ட் லென்ஸா? எய்ட்ஸ் வரும் கவனம்

ஹெல்சிங்கி, நவ 28

நீங்கள் 'கன்ராக்ட் லென்ஸ்' பாவிப்பவரா? அப்படியானால்உங்களை எய்ட்ஸ் நோய் பீடிக்கும் ஆபத்து உண்டு.

இப்படி பின்லாந்து நாட்டு வைத்திய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

எய்ட்ஸ் நோய்பிடித்து ஐந்து பேர்கள் பாவித்த ''கன்ராக்ட் லென்ஸ்'' களில் எய்ட்ஸ் வைரஸ் கிருமிகள் காணப்பட்டதாகவும் இந்த டாக்டர்கள் குழு கூறியுள்ளது.

வாடிக்கையாளர் பாவிக்கும்'கன்ராக்ட்லென்ஸ்' களை கவனமாக கண்பரிசோதனை நிபுணர்கள் துப்புரவுசெய்து கொடுக்க வேண்டும் என்றும் இக்குழு கேட்டுள்ளது.

''கன்ராக்ட் லென்ஸ்' களைஉப்புநீரில் இரண்டு மணித்தியாலங்கள் வரைபோட்டுவைத்தால்எய்ட்ஸ் கிருமிகள்இறந்துவிடும் என்றும் டாக்டர்கள் கூறுகின்றனர்.

## பயணிகள் கொல்லப்பட்டதற்கு ஐ.நா. செயலாளர் கண்டனம்

கடத்தப்பட்ட எகிப்திய விமானத்திலிருந்த பயணிகள் பலர் கொல்லப்பட்ட சம்பவத்தை ஐ. நா. சபை செயலாளர் நாயகம் கடுமையாகக் கண்டித்துள்ளார். இறந்தவர்களுக்காக அவர் தனது வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

விமானத்தைக் தகர்க்க தான் எடுத்துக் கொண்ட நடவடிக்கை சரியென எகிப்திய அரசு கூறியுள்ளது. மோல்டா அரசும் எகிப்தின் நடவடிக்கையை நியாயமானது என்றே கூறியுள்ளது. லிபியா இது ஒரு மோசமான நடவடிக்கையெனக் குற்றம் சாட்டியுள்ளதுடன் பயணிகள் இறந்ததற்கும் வருத்தம் தெரிவித்தது.

கிரேக்க அரசு மோல்டா அரசு தன்னுடன் இது விடயமாகத் தொடர்பு கொள்ளவில்லையெனக் கண்டித்துள்ளது. கடத்தப்பட்ட விமானத்தில் 17 கிரேக்க பிரயாணிகள் இருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## மணிலா விடுதிகளில் நிர்வாண ஓவியம்

### குடும்பப் பெண்கள் ஆவேசம்

மணிலா, நவ. 28

நிர்வாண ஓவியங்கள் அலங்கரிக்கும் உணவு விடுதிகள், குடும்பப் பெண்களின் கோபத்திற்கு இலக்காகியுள்ளன.

இந்த உணவு விடுதிகளில் மதியபோசனம் அருந்த உயர் அதிகாரிகள், லர்த்தகர்கள் படையெடுக்கின்றனராம்.

கேட்டால் கலையம்சம் நிறைந்த உணவு விடுதிகள் அவை என்று கூறுகின்றார்களாம். தங்கள் கணவன்மார்களுக்கு கலையில் திடீரென்று ஏன் இவ்வளவு அக்கறை என்று மனைவியர் விசாரணை நடத்திய போதுதான் நிர்வாண ஓவியங்கள் அடங்கிய கண்காட்சி அந்த உணவு விடுதிகளில் நடப்பது தெரியவந்தது.

நகர மேயரிடம் இதுபற்றி முறையிட்டு தோல்வி கண்ட குடும்பப் பெண்கள், பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியின் மனைவி இமெல்டா மார்க்கோஸுக்கு இப்பொழுது முறையிட்டுள்ளனர்.

இப்படி 'புளட்டின் இன்று' என்ற செய்திப், பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

நிர்வாண ஓவியக்காட்சிகளை நடத்தும் உணவுவிடுதிகளை மூடிவிட நடவடிக்கை எடுக்கும்படி, குடும்பப் பெண்கள் . ஜனாதிபதியின் மனைவியைக் கேட்டுள்ளனர்.

## பூமியும் விண்வெளியும் போர்க்களமாகக் கூடாது

### பாரதப் பிரதமர் விருப்பம்

விண்வெளியும் பூமியும் அணுவாயுதப் போட்டியின் போர்க்களங்களாகி விடக்கூடாது என இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

பூமியையும் விண்வெளியையும் வல்லரசுகள் போர்க்களங்களாக்க முயற்சிக்கும் நடவடிக்கைகள் அவரால் மேலும் கண்டிக்கப்பட்டன.

## ஸ்ரீராமகிருஷ்ண அயோத்தி இந்துக்களுக்கு உரியதே

### ஒப்படைக்குமாறு இந்திய அரசை கோருகிறது இந்து மதகுரவர் மாநாடு

மங்களூர், நவ 28

அயோத்தியில் உள்ள ஸ்ரீராம ஜன்ம பூமியை இந்துக்களிடம் ஒப்படைக்கும்படி இந்திய அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடப்பட்டு உள்ளது.

1986 மகா சிவராத்திரிக்கு முன்னர் ஸ்ரீராம ஜன்ம பூமி ஒப்படைக்கப்பட வேண்டும்; அல்லது மார்ச் 9 ஆம் திகதியில் இருந்து ஏப்ரல் 18 வரை நாடு முழுவதும் சத்தியாக்கிரக இயக்கம் நடத்தப்படும்.

அத்துடன் ஸ்ரீ ராம ஜன்மபூமியை நோக்கி பேரணி நடத்தப்படும்.

இந்தியாவில் உள்ள இந்து மதத் தலைவர்கள், ஞானிகள்,மடாதிபதிகள் மாநாட்டில் மேற்கண்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

விஷ்வ ஹிந்து பரிஷத் நடத்திய இரண்டாவது இந்து சமயத் தலைவர்கள் மாநாடு மங்களூர், உடுப்பியில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணர் ஆலயத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் 850 ஆச்சாரியர்கள், சுவாமிகள், ஞானிகள் கலந்து கொண்டனர்.

மேற்கண்ட தீர்மானத்தை 'ஓம்'என்ற குரலொழுப்பி ஏகமனதாக அவர்கள் ஆமோதித்தனர்.

இறுதி நாள் மாநாட்டில் பெஜவார் மடத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் விஸ்வேஷ தீர்த்த சுவாமிஜி பேசுகையில் எல்லா இந்து சமயிகளையும் ஏக மாதா தத்துவம் உள்ளத் திருப்தி அளிப்பதாகக் குறிப்பிட்டார்.

சங்கையைப் புனிதமாக்கும் பிரதமர் ராஜீவ் காந்தியின் திட்டத்தையும் அவர் வெகுவாகப் பாராட்டினார்.

மதுராவில் உள்ள ஸ்ரீகிருஷ்ண ஜன்மபூமி [illegible] பேரணி நடத்தப்படும்.

[illegible] ஆலயத்தில் [illegible] மூடப்பட்டிருக்கும் வரையிலும் உள்ள [illegible] சுவாமி கோயிலிலும் இந்துக்கள் இடையூறு எதுவுமின்றி வணங்க பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பெஜவார் மடாதிபதி கேட்டுக் கொண்டார்.

பத்ரிநாத்தை சேர்ந்த ஸ்ரீ சாந்தானந்தஜி பேசுகையில் சொன்னதாவது;

அயோத்தி, ஸ்ரீராமன் பிறந்த பூமி மட்டும் அல்ல. இந்துக்களின்வேதமாகிய மனுஸ்மிருதியை வழங்கிய மனு அவதரித்த பூமியுங்கூட. ராமர், மனு பிறந்தபூமி. இன்னும் முஸ்லிம்களின் கைகளில் இருப்பதை இந்துக்கள் இனியும் பொறுக்க முடியாது.

மகா சிவராத்திரிக்கு முன்னர் ராம ஜன்மபூமி இந்துக்களிடம் ஒப்படைக்கப்படாவிட்டால் மகாசிவராத்திரியில் இருந்து ராமநவமி வரை [illegible] பேரணி நடத்தப்படும். [illegible] ஆலயத்தின் மூடப்பட்ட கதவுகள் பலவந்தமாக உடைக்கப்படும். கைது செய்யப்படுவர் என்ற பயமுறுத்தல்களுக்குஅஞ்சாது இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

அரசாங்கம் தங்களது கோரிக்கைக்கு இணங்காவிட்டால் தீக்குளிப்பு நடவடிக்கையில் இறங்கவும் தயார் என்று மாநாட்டில் கலந்து கொண்ட பல சுவாமிஜிகள் கைகளை உயர்த்தி பிரதிக்ஞை எடுத்துக் கொண்டனர்:

அயோத்தியில் உள்ள ஸ்ரீராமர் கோயில் 16 ஆம் நூற்றாண்டில் முகலாய மன்னர் ஒருவரால் பள்ளிவாசலாக மாற்றப்பட்டது, அதன் பின்னர் அந்த மசூதியில் இராமர் சிலை ஒன்றை வைக்க எடுத்துக்கொண்ட முயற்சியைத் தொடர்ந்து மசூதியும் மூடப்பட்டது.

## றேகன் - கோர்பச்சேவிடம்

### 3 லட்சம் குழந்தைகள் விடுத்த கோரிக்கை

ஜெனீவா, நவ 28

சமாதானம் வேண்டி விடுத்த இரங்கல்களை வாசிக்க குழு ஒன்றை நியமிக்கும்படி அமெரிக்க அதிபர் றேகனையும் ரஷ்யத் தலைவர் கோர்பச்சேவையும் 3 லட்சம் குழந்தைகள்கேட்டுள்ளனர்.

இக்குழந்தைகள் விடுத்த வேண்டுகோள்கள் ஜெனீவாவில் ஒரு அறையில் வைக்கப்பட்டு இருப்பதாக 'சமாதான பறவை' இயக்க அமைப்பாளர் ஹொல்கர் கெஸ்பெல்ட் சொன்னார்.

இக் குழந்தைகளின் தூதுக்குழு ஒன்று உச்சி மாநாட்டுக்காலத்தில் ஜெனீவா வந்தது. இரண்டு தலைவர்களிடமும் ஒரே நேரத்தில் தங்கள் வேண்டுகோள்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதே குழந்தைகளின் ஆசை.

ஆனால் இரண்டு தலைவர்களும் குழந்தைகள் தூதுக் குழுவை தனித் தனியாகச் சந்திக்க விரும்பினார்கள். கூட்டாகச் சந்திக்க விரும்பவில்லை.

குழந்தைகளின் வேண்டுகோள் கடிதங்கள் இப்போது ஜெனீவாவில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளன

## ஜெனீவா உச்சி

### மாநாட்டு முடிவுகளுக்கு ரஷ்யா அங்கீகாரம்

மாஸ்கோ, நவ 28

ஜெனீவா உச்சிமாநாட்டின் முடிவுகளை ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிற்பீரோ பூரணமாக அங்கீகரித்துள்ளது.

இப்படி டாஸ் செய்திஸ்தாபனம் அறிவித்துள்ளது.

ஜெனீவாவில் இடம் பெற்ற றேகன் கோர்பச்சேவ் பேச்சுக்கள் சர்வதேச உறவில் இப்பொழுது நிலவும் அரசியல், உள்ரீதியான சூழலை சாதகமாக மாற்றக் கூடியவை'' என்றும் பொலிற்பீரோவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முதல்வர் பர்னலா மீது நம்பிக்கை

### பஞ்சாப் நெருக்கடி சுமுகமாக தீர்ந்தது

சண்டிகார், நவ 28

பஞ்சாப் மாநிலத்தின் அரசியல் நெருக்கடி ஒன்று சுமுகமாகத் தீர்ந்தது.

பஞ்சாப்பின் அகாலிதள் முதலமைச்சர் சுர்ஜித்சிங் பர்னலாவிற்கு நம்பிக்கை தெரிவித்து, கட்சி நாடாளுமன்றக் குழு தீர்மானம் ஒன்று நிறைவேற்றியது இதைத் தொடர்ந்து நெருக்கடி தீர்ந்தது.

திரு. பர்னலா அகாலிதள் கட்சியின் பதில் தலைவராக கடந்த ஆகஸ்டில் பதவி ஏற்றார். மிதவாதத் தலைவரான ஹர்சாரந்த லோங்கோவால் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து திரு. பர்னலா பதில் தலைவரானார்

அண்மையில் கட்சியின் 40 மாவட்டத் தலைவர்கள் கூடி திரு. பர்னலாவில் நம்பிக்கை தெரிவித்தனர்.

சம்பிரதாய பூர்வமாக அகாலிதள் தலைவரைத் தெரிவு செய்ய கட்சியின் 450 பேர் கொண்ட பொதுச்சபை டிசம்பரில் நடைபெற உள்ளது.

## குண்டு வெடிப்பு

ஏதென்ஸில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு ஒன்றில் இரண்டு பொலீஸார் மரணமானார்கள் பதினொரு பொலீஸார் படுகாயமடைந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
Donated by Mr. Kandiah Thavanathan

### உதய சங்கற்பம்

பொறுமை, வஞ்சகத்தை கைவிடுங்கள்.
மற்றவர்களுக்காக ஒன்றுபட்டு உழைக்க பழகிக்கொள்ளுங்கள்.
இதுதான் நாட்டுக்கு அவசியம் தேவை.

சுவாமி விவேகானந்தர்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மிசைரா நிலைய வீதி, யாழ்ப்பாணம். 29-11-85 த.பெ. 23

தொலை பேசி: 24805 22078


## இந்திரா, ராஜீவ், இலங்கை

விடுதலைப் போராட்டங்களை நிதானத்துடன் ஆதரித்தவர். பிராந்திய ஒத்துழைப்பை வலுவடையச் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டவர்.

உலக சமாதானத்தை உருவாக்க முழு மனதுடன் செயற்பட்டவர். ஆயுதப் போட்டா போட்டியை முடிவுக்குக் கொண்டுவரப் பயன் மிகுந்த பணி ஆற்றியவர். அடக்குமுறைகளையும், அநீதிகளையும் துணிந்து எதிர்த்து வந்தவர்.

அமரர் இந்திராவைப் பற்றி இப்படித் தெரிவித்தார் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி. இந்திரா நினைவாக வியட்னாமில் விருது ஒன்று வழங்கப்பட்டது. அதனைப் பெற்றுக்கொண்டு உரைநிகழ்த்துகையிலேயே பிரதமர் ராஜீவ் இதனைச் சொன்னார்.

இது அன்னையைப் புகழும் மைந்தன் உரையல்ல. உலகம் ஒப்புக்கொள்ளும் உண்மை. அடக்கி ஒடுக்கப்பட்டு, அடிப்படை உரிமைகள் இன்றி அல்லற்படுவோரின் இரட்சக அன்னையாக விளங்கியவர் இந்திரா. விடுதலைக்காகப் போராடும் மக்களுக்கு கை கொடுக்கும் தெய்வமாகவும் அவர் திகழ்ந்தார்.

இந்த நாட்டின் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்பட்டு, இன்னற்படும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கும் அவர் துணை நின்றார்.

இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அவர் இதய சுத்தியுடன் ஈடுபட்டார். அவரது தூண்டுதலினால் தான் சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது. ஆனால் எதிர்பார்த்த விளைவு எதுவும் கிடைக்கவில்லை. இந்திரா உயிருடன் இருந்திருப்பின் எங்கள் பிரச்சினையும், அணுகுமுறையும், தீர்வும் வேறு விதமாக இருந்திருக்கும். அது நிச்சயம்.

தாயாரின் மறைவுக்குப் பின்னர் பதவிக்கு வந்த ராஜீவின் போக்கு அவ்வளவு திருப்திகரமாக இருக்கவில்லை. தமிழகத்தின் தொந்தரவு ஒன்றுக்காகத் தான் அவர் இலங்கைப் பிரச்சினையை ஒரு பொருட்டாகக் கொள்கிறாரோ என்று எண்ணும் அளவுக்கு நிலைமை அதிருப்தியாக இருந்தது.

எனினும் அவர் இப்போது எடுத்து வரும் நடவடிக்கைகள் நம்பிக்கை தருவனவாக உள்ளன என்று எண்ண இடமுண்டு. இந்திராவின் வயிற்றில் பிறந்தவர் அல்லவா ராஜீவ்?.

எடுக்கும் இடத்தில் எடுத்து, கொடுக்கும் இடத்தில் கொடுத்து, அடிக்கும் இடத்தில் அடித்து, அணைக்கும் இடத்தில் அணைக்கும் ராஜதந்திரமும், அரசியல் சாணக்கியமும், மதியூகமும் அவரிடம் இல்லாமலா போகும்!

இலங்கைத் தமிழ் வாலிபர்களை "பையன்கள்" என்று முதலில் கூறிப் பின்னர் "இலங்கைத் தமிழத் தலைவர்கள்" என்று தன்னைத் திருத்திக் கொண்ட ராஜீவின் போக்கையும் செயலையும் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# குன்றுதோறாடும் குமரன் ஆறுமுகமான பொருள்

பண்டைக் காலம் தொடக்கம் தமிழர் வணக்கத்துக்குரிய கடவுள் முருகன். குன்றுதோறாடும் குமரனாகவும், மலைகளிலே உறையும் சூர்களைக் கடியும் கந்தனாகவும், வெற்றிவேல் போர்க் கொற்றவையின் மைந்தனாகவும் முருகன் தமிழ்ப் புலவர்களாலே போற்றிப் புகழப்பட்டுள்ளான். 'அஞ்சு முகந் தோன்றில் ஆறுமுகம் தோன்றும், வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும்' என்பது ஆன்றோர் நம்பிக்கை. காலந்தோறும் பல புலவர்களாலே முருகனுக்குப் பாமாலைகள் தொடுக்கப்பட்டுள்ளன. பண்டைத் தமிழ்ப் புலவர் பரிபாடல் என்னும் நூலிலே, 'யாஅம் இருப்பவை பொன்னும் பொருளும் போகமுமல்ல, அன்பும் அருளும் அறனேயாகும்' என்று வேண்டுகிறார். முருகனுக்குப் புதுத் தமிழ் வண்ணச்சுவைப் பாடல்கள் பாடிய அருணகிரியார் 'ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்' எனக் கேட்கின்றார். அவர் வேண்டும் 'ஆறுமுகமான பொருள்' யாது?

### ஏறுமயிலேறி விளையாடும் முகம்

முருகன் மலைக் கடவுள். மலைசார்ந்த செழுமையான இடத்திலே வாழ்வது மயில். அழகுக்கும் செழுமைக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்வது மயில். மலைப் பகுதியிலே தலைவனைச் சந்தித்து இயற்கைப் புணர்ச்சியின் பின்னர் மலையிலிருந்து இறங்கி வரும் தலைவியின் கோலத்தை, மலையிலிருந்து இறங்கிவரும் மயிலுக்கு ஒப்பிடுகிறார் ஓர் அகநானூற்றுப் புலவர். புதுப் பொலிவும் புது வளமும் கொண்டவளாக வரும் தலைவியின் கோலம், பொலிவுக்கும் வளத்துக்கும் எடுத்துக் காட்டாகத் திகழும் மயில்போலத் தோன்றியது ஆச்சரியமில்லை, மயில் முருகனுடைய வாகனம். மயிலிலே ஏறி விளையாடும் முருகன் குழந்தையாகக் காட்சியளிக்கிறான். அழகினையும் வளத்தினையும் அளிக்கும் கடவுள் அழகுக்கும் வளத்துக்கும் எடுத்துக் காட்டான குழந்தையாக மயிலிலே ஏறி விளையாடுகிறான். குழந்தையும் தெய்வமும் குணத்தாலே ஒன்று என்பர். குழந்தைப் பருவம் மிக அற்புதமானது. கள்ளங் கபடம் தோன்றாத காலம். பொய்யும் வழுவும் சேராத வடிவம். எவரையும் இலகுவிலே ஈர்த்துக் கொள்ளும். சின்னஞ்சிறு கிளியாகவும் செல்வக் களஞ்சியமாகவும் பிறர் தன்னைக் காணவைக்கும் தன்மையுடையது. வளர்ந்தவர்களும்கூட சில சந்தர்ப்பங்களில் குழந்தை முகத்துடன் இருக்க ஆசைப்படுவர். ஏனெனில் அது எல்லோருக்கும் விருப்பமான முகம். சங்கப் புலவரும் மன்னனுமாகிய பாண்டியன் அறிவுடை நம்பி புறநானூற்றுப் பாடலொன்றில்,

படைப்புப் பல படைத்துப் பல ரோடுண்ணும்
உடைப்பெருஞ் செல்வராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி இட்டுந் தொட்டும் கவ்வியுந் துழந்தும் நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும் மயக்குறு மக்களை யில்லோர்க்குப் பயக்குறையில்லை தாம் வாழுநாளே.

என்று குழந்தைச் செல்வத்தின் சிறப்பை எடுத்துக் கூறுகிறான். பலரையும் மகிழ்விக்கும் குழந்தை முகம் எங்கள் ஒவ்வொருவருக்கும் அவசியமானதாகும்.

### ஈசரோடு ஞானமொழி பேசுமுகம்

நாங்கள் எல்லோரும் மொழி பேசுபவர்கள். அவ்வாறு நாம் பேசுகின்ற மொழி ஞானமொழியாக அமைந்துவிட்டால், அதைவிடப் பேறு என்ன நமக்கு வேண்டும்? தந்தைக்கு ஞான உபதேசம் செய்தவன் முருகன். அவனை வேண்டினால் அவன் எமக்கு ஞானமொழி அருள்வான். முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன் அக்கும்பரன். உடல் உறுப்புக்களெல்லாம் இறைவன் சேவைக்காகவே அமைந்துள்ளன என்று கூறும் அப்பர் சுவாமிகள், வாய் இறைவனை வாழ்த்துவதற்கே அமைந்துள்ளது எனக் கூறுகிறார். பிறந்து மொழி பயின்ற காலந் தொடக்கம் இறைவன் நாமத்தை ஏத்துதற்குப் பயின்றதாகக் சுரைக் காலம்மையார் கூறுகிறார். உலகியல் வாழ்

### ஞானக்கதிர்

விலே சிலருடைய முகம் வாக்குவசீகரமுடைய முகம் எனக் கூறுவதைக் கேட்கிறோம். தம்மிலும் உயர்ந்தவர்களுடனும் மொழி பேசுந் திறமை சிலரிடத்தே உண்டு. ஈசருடனே ஞானமொழி பேசுகின்ற முகத்தைத் தரிசிப்பதன்மூலம், அம்முகத்தை நாமும் பெற்றுக்கொள்ளலாம்.

'கந்தா சுகந்தா' என்று

-- பேராசிரியர் அ. சண்முகதாஸ் --

இரங்கும் அடியார்களைத் தேடிச்சென்று காப்பவன் முருகன். வினையிலே மூழ்கியிருப்பது அடியார்களுடைய நிலை. அவ் வினைகளிலிருந்து நீங்குதற்கு இறைவழியைக் கண்டவர்கள் இறைவனுடைய கருணையை, அருளை அனுபவித்தவர்கள். அடியார்கள் இறைவனை நினையாவிட்டாலும், பால் நினைந்தூட்டும் தாயைப்போல அயார்களைத் தேடி வந்துதுறைநீக்கும்கருணை வள்ளல் இறைவன். அத்தகையோனிடம் அடியார்கள் தங்கள் குறைகளைக் கூறிவிட்டால், அவன் முகம் மலர்ந்து அவர்கள் வினைகளைத் தீர்த்து வைப்பான். எமக்கு உதவ எத்தனையோ பேர் இருப்பது போல நாம் உதவக்கூடிய பலர் இருக்கிறார்கள். அவர்கள் குறை உணர்ந்து அவற்றைத் தீர்த்து வைக்கக்கூடிய திரு எம்மிடம் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். இத்தகைய திருவுடையாரை இறைவன் தன்னுடைய சேவைக்குப் பயன்படுத்திக் கொள்கிறான். மண்ணிலே இறையருள் வந்து செறிய இவர்களைப் போன்றவர்கள் ஊடகங்களாகின்றனர். இத்தகைய திருநெறிய முகம், முருகனுடைய 'கூறுமடியார்கள் வினை தீர்க்கும்' முகத்தினைப் பணிந்து தரிசிப்பதன் மூலம் கிட்டும்.

### வாசகர் திருமுகம்

#### உதயனே வாழி!

இலித்திடும் செந்தமிழில்
இதயம் கவர்ந்திழுக்க
மனித்தரைத் தேவராக்கும்
மாசற்ற நோக்குடனே
கனித்திடும் செய்தியெல்லாம்
கரும்பென தினமும் நல்க
உதித்திடும் ஞாயிறொப்ப
உதயனும் ஓங்கி வாழி!

'கவிமாமணி'
என். வீரமணி ஐயர்

### பொய்யாமொழி

மலர்மிசை ஏகினான்
மாண்டி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்
அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளை இடைவிடாமல் நினைக்கின்றவர், இன்ப உலகில் நிலைத்து வாழ்வார்.

### வள்ளியை மணம் புணர வந்த முகம்

திருமணக் கோலம் எல்லோருக்குமே அழகாகவே இருக்கும். மனத்திலே மிகுந்த மகிழ்ச்சி திருமணக் காலத்திலே ஏற்படுகின்றது. அந்த கோலமும் மகிழ்ச்சியும் மனைவியுடன் வாழுகின்ற காலமெல்லாம் இருக்கவேண்டும். மனைவிக்கு அந்தக் கோலமும் மகிழ்ச்சியும் கணவனுடன் வாழுகின்ற காலமெல்லாம் இருக்கவேண்டும். இவ்வுணர்வைப் புலப்படுத்தும் முகப்பொலிவினை அந்த முருகன்தான் அருளுவான். அவன் 'மணம் புணர' நின்ற முகக்கோலம் எம் மனக்கண்ணிலே தினமும் தோன்ற அவனை வணங்க வேண்டும். அப்படி இடையிடில்லாமல் வணங்கினால் மனவியை மறக்கவைக்காது; மனவாளக் கோல முகம் எப்பொழுதுமே மனைவிக்குத் தோன்ற வைக்கும்.

சாதாரண உலகியல் வாழ்விலே, அருணகிரியார் வேண்டும் 'ஆறுமுகமான பொருள்' மேற்காட்டிய ஆறு குணங்களையும் பிரதிபலிக்கும் ஆறுமுகங்களையும் எம்முடைய ஒரு முகத்திலேயே சேர்த்துவிடும் நிலையாகும். அதற்கு உயர்ந்த சித்தாந்தப் பொருள் உண்டு.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

### கல்வயல் கிராமத்தில் சுகாதார கண்காணிப்பு குழு

சாவகச்சேரி, நவ 29
சாவகச்சேரி நகராட்சி மன்ற நிர்வாகத்தில் உள்ள கல்வயல் கிராமத்தில் சென்ற ஞாயிற்றுக் கிழமை ஆரம்ப சுகாதாரக் கண்காணிப்புக்குழு நிறுவப்பட்டது.

சுகாதாரப் பொறுப்பதிகாரி திரு. எஸ். செல்வபாஸ்கரனு ரைநாயகம் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நகராட்சி மன்றச் செயலாளர் திரு. த. நவரத்தினராசா, ஆயுள்வேதசித்த வைத்தியமணி திரு. பே. பிலிப்பு ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

குழுவின் தலைவராக திரு. சி. சிவானந்தமும் உப தலைவராக திரு. எஸ். அருளம்பலமும் செயலாளராக திரு. எஸ். தர்மலிங்கமும் பொருளாளராக திரு. ஆர். பஞ்சாட்சரமும் தெரிவு செய்யப்பட்டனர்.

### ஆற்றல் உள்ள மாணவர் சிலர் இருந்தால் ஏனையோரும் முன்னேறுவர்

#### வைத்தீஸ்வரா வித்தியாலய பழைய மாணவர் சங்க கூட்டத்தில் உரை

திருநெல்வேலி, நவ 29

ஆற்றலும் ஆர்வமும் உடைய மாணவர்கள் ஒரு சிலராவது ஒரு வகுப்பில் இருந்தால் நடுத்தர மாணவர்களும் அவர்களைப் பின்பற்றி கல்வியில் முன்னேற்றம் அடைவர். எமது புலமைப்பரிசில்திட்டம் திறமையான மாணவர்கள் பலரை இவ் வித்தியாலயத்திற்குகொண்டு வரும் என்பது நிச்சயம்.

யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் விசேஷ கூட்டம் ஒன்றிற்குத் தலைமை வகித்து பேசிய வித்தியாலய அதிபர் திரு. சி. சரவணபவான் (சிற்பி) மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து அவர் பேசும்போது, பாடசாலை நிர்வாகத்தில் தலையிடாமல் பல்வேறு துறைகளில் பாடசாலையை முன்னேற்றுவதற்கு ஆலோசனையும் உதவியும், ஒத்துழைப்பும் வழங்கிவரும் உங்கள் சங்கம் இவ் விடயத்தில் ஏனைய பழைய மாணவர் சங்கங்களுக்கு முன்மாதிரியாக விளங்குவது பாராட்டுக்குரியது என்றார்.

### மத்தியஸ்தர் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 29
யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கம் புதிய மத்தியஸ்தர்களை சேர்த்துக் கொள்ள இருக்கிறது.

மத்தியஸ்தர்கள் தேர்வுக்கான பரீட்சைகள் மிகவிரைவில் நடைபெறும்.

இப்பரீட்சைகளில், சித்தியடைபவர்கள் புதிய மத்தியஸ்தர்களாக சங்கத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

### தொற்று நோய் பரவாது தடுக்க உதவி அரச அதிபர் சொல்லும் வழி

சுன்னாகம், நவ 29
பொதுமக்கள் மலசல கூடங்களை பாவிப்பதன் மூலம் தொற்று நோய்கள் பரவுவதை தடுக்க முடியும். சுன்னாகம் பட்டின எல்லைக்குள் மேலும் பல மலசலகூடங்கள் நிறுவப்படவேண்டும்.

எனவே தான் மலசல கூடங்களை நிர்மாணிக்கும் ஒவ்வொருவருக்கும் 250 ரூபா பண உதவி செய்ய நாம் முன்வந்துள்ளோம்.

உடுவில் உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் முன்றும் வட்டார மக்களுடன் நடத்திய பேட்டியின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுன்னாகம் பிரதேச அபிவிருத்தி சபையின் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. இராமலிங்கம் அங்கு பேசுகையில், சுன்னாகம் சந்தையிலும் அதன் அருகாமையிலும் உள்ள ஒழுங்கைகளில் சேரும் குப்பைகள் வாரத்துக்கொரு தடவையாகுதல் அகற்றப்படும் என்று சொன்னார்.

மாட்டு வண்டிகள் மூலம் குப்பைகளை அகற்றநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

மக்கள் தமது குறைகளை எழுத்து மூலம் தமக்குச் சமர்ப்பித்தால் உரிய நடவடிக்கைகளை தான் எடுப்பதாக உதவி அரச அதிபர் குழுவினரிடம் உறுதி அளித்தார்.

### பொலீஸ் நிலையத்துக்கு பாதுகாப்பு

யாழ்ப்பாணம், நவ. 29
வரலாழச்சேனை பொலீஸ் நிலையம் நாளுக்கு நாள் பலப்படுத்தப்பட்டு வருகிறது.

இதனால் அவ் வழியால் சென்றுவர பொது மக்கள் அஞ்சுகிறார்கள்.

பிரதான வீதியில் பொலீஸ் நிலையம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### வெள்ளம் பாதித்த இடங்களில் தானியம் பயிரிட நடவடிக்கை

#### யாழ் செயலக உதவி அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், நவ 29
வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வயல் நிலங்களில் மாற்றுச் செய்கையாக எள்ளு, கௌபீ, பயறு முதலியவற்றைப் பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[illegible] சம்பந்தமான ஆலோசனையும் கூறப்பட்டுள்ளதாக யாழ்செயலக உதவி அரசாங்கஅதிபர் திரு. ச. பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட [illegible] செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டது தெரிந்ததே. அப்படிப் பாதிக்கப்பட்ட வயல் நிலங்களில் மீண்டும் நெல் பயிரிட முடியாது.

ஆகவே மாற்றுப் பயிர்ச் செய்கை எள்ளு, பயறு, கௌபீ முதலியன பயிரிடுவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் வசதிகளையும் விவசாயிகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

### காரைநகரில் பரிசளிப்பு விழா

காரைநகர், நவ 29
காரைநகர் வலந்தலை தெற்கு அ. மி. த. க. பாடசாலையில் 5 ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திஅடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா கடந்த வாரம் நடந்தது.

பாடசாலை அதிபர் திரு. அ. கமலாகரன் விழாவுக்கு தலைமை வகித்தார்.

### ஈழத்து சிதம்பரத்தில் ராஜ கோபுரங்கள்

காரைநகர், நவ 29
காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் சுமார் 29 லட்சம் ரூபா செலவில் இரண்டு ராஜ கோபுரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

சிவனுக்கும், இயனருக்கும் ஒரே தடவையில் அமைக்கப்படும் இந்த ராஜ கோபுரங்கள் கருங்கல் வரி வரை பூர்த்தியடைந்துள்ளன

### தலை இயக்கங்களின் கடமை ஆகும்.

மூளாய் சித்தி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்ற ஆறு தியாகிகளின் ஓராண்டு நினைவஞ்சலிக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய சட்டத்தரணி திரு. கே. விக்கினராஜா இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தனது தலைமையுரையில் தொடர்ந்து கூறியதாவது:-

இன்று சில விடுதலை இயக்கங்கள் மத்தியில் ஒற்றுமை காணப்படவில்லை. விடுதலை இயக்கங்களிடையே ஒற்றுமையின்மை நிலவுவது பொது மக்களையே பெரிதும் பாதிக்கிறது.

மக்களுக்காக இயக்கங்கள் என்ற நிலைமாறி இயக்கங்களுக்காக மக்கள் என்ற நிலை உருவாகக் கூடாது.

இந்நிலையை உருவாக்க முயலும் சிலரை மக்கள் இனங்காண வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### பொது மக்களை பாதுகாப்பது இயக்கங்களின் கடமை

#### தியாகிகள் நினைவஞ்சலி கூட்டத்தில் உரை

காரைநகர், நவ 29
வடபகுதியில் சிவில் நிருவாகம் குலைந்ததால் இன்று கொலை, கொள்ளை போன்ற வன் செயல்கள் நடைபெறுகின்றன. எனவே சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி வன்செயல்கள் நடைபெறு வண்ணம் பொது மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியது விடுதலை இயக்கங்களின் கடமை ஆகும்.

### பத்திரகாளி அம்பாளுக்கு சித்திரத் தேர்

திருநெல்வேலி நவ. 29,
திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு புதிய சித்திரத் தேர் ஒன்று அமைக்கப்படவிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்கள், 1986ஆம் ஆண்டுக்கான கலண்டர்கள், டயறி வகைகள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
தந்தி: BOOKS தொலைபேசி: 23631

உதயன்

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையிலான சகல புத்தகங்களுக்கும்
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
தந்தி: BOOKS தொலைபேசி: 23631

# தமிழ் இளைஞரை விடுதலை செய்யுங்கள்

## அல்லது நீதிமன்றத்தில் நிறுத்துங்கள் --சரத்

கொழும்பு, நவ.29

தமிழ் இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை விசாரித்து விடுதலை செய்ய வேண்டும். அல்லது குற்றப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு அவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும்.

கலவானை எம்.பி. திரு. சரத் முத்தெட்டுவேகம நேற்று நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு சம்பந்தமான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு அவர் உரை நிகழ்த்தினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தெற்கில் இடதுசாரிகள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இத்தகைய சம்பவங்களால் நாடுபயங்கரவிளைவையே எதிர்நோக்க வேண்டிவரும். ஆகவே நீண்ட நாட்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விசாரிக்கப்பட்டு விடுதலை செய்யப்படவேண்டும் அல்லது அவர்களை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.

இவ்வாறுநீண்டநாட்களாகஇளைஞர்கள் தடுத்து வைக்கப் பட்டிருப்பதை நாகரிகசமுதாயம்ஏற்றுக் கொள்ள முடியாது.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 'லங்கா புவத்' மார்க்சிச பயங்கரவாதிகள் என்று அனைவரையும் குறிப்பிடுகிறது. இசன் மூலம் முழு நாட்டிலும் மார்க்சிச சதி நடை பெறுவதாக மேல் நாடுகளுக்கு காட்டமுனைகின்றனர்.

இலங்கை பிரச்சினையையும் மார்க்சிசத்தையும் தொடர்பு படுத்தி மேற்கு நாடுகளுக்குகாட்ட அரசு முனைகின்றது.

சமீபத்தில் தெற்கில் இடதுசாரிகள் பலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதும் இதற்கே ஆகும்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப் படுகின்றார்கள். அண்மையில் சொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் தற்கொலை செய்து கொண்டார் என்று கூறப்படுகிறது.

இப்படி கலவானை எம்.பி. கூறினார்.

## கிளிநொச்சியில் கைதான 26 பேரை விடுவிக்க பிரஜைகள் குழு முயற்சி

கிளிநொச்சி, நவ 29

கிளிநொச்சி, திருநகர், பாரதிபுரம், விசுமடு, தர்மபுரம் ஆகிய இடங்களில் கைது செய்யப்பட்ட 26 பேரை விடுவிக்கும் முயற்சியில் கிளிநொச்சி பிரஜைகள் குழு ஈடுபட்டு வருகிறது.

இது தொடர்பாக ஆனையிறவு தடைமுகாம் இராணுவ தலைமையகத்தின் கேணல் திஸ்ஸ திலகரத்தினாவையும், மேஜர் ஸ்ரீவனையும் சந்தித்த கிளிநொச்சி பிரஜைகள் குழுவினர் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமுக்குச் செல்லவுள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி திருநகர், பாரதிபுரம் கிராமங்கள் இரவோடிரவாக சுற்றிவளைக்கப்பட்டு 150க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் முயற்சியால் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இதே போன்று இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ள 26 பேரையும் விடுதலை செய்யும்படி பிரஜைகள் குழு வற்புறுத்தி வருகிறது.

கடந்த 27ஆம் திகதி காலை தர்மபுரம், முரசுமோட்டையில் தாயும் மகளும் உட்பட கைது செய்யப்பட்ட ஐவரையும் விடுவிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

## விடுதலை இயக்கங்களை பலப்பரீட்சை வேண்டாம்

### 'ஈரோஸ்' பத்திரிகை அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 29

விடுதலை இயக்கங்களுக்கிடையில் பலப்பரீட்சை வேண்டாம். ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) பத்திரிகை அறிக்கை ஒன்றின் மூலம் இப்படி வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அரசு போர் நிறுத்தக் காலத்தைச் சாதகமாகப் பயன்படுத்துகிறது. மக்களுக்கு எதிராக யுத்தம் ஒன்றிற்கு திட்டமிட்டு செயற்படுகிறது.

இந்நிலையில் எமக்கிடையிலான குறைந்த பட்ச உடன்பாடுகளை அவமதிக்கும் வகையில் சில இயக்கங்கள் செயற்படுகின்றன. இது மக்களுக்கு வேதனை அளிப்பது போல எமக்கும் வேதனை அளிக்கிறது.

இது எதிரிக்கு எதிராக ஒற்றுமைப்பட வேண்டிய நேரம்; போராட்டத்தை உக்கிரப்படுத்த வேண்டிய நிலை: ஐக்கியப்பட வேண்டிய தருணம்.

இந்நிலையில் இயக்க வேறுபாடுகளை முதன்மைப்படுத்துவதும் மோதலில் இறங்குவதும் எதிரியையே பலப்படுத்தும், அது போராட்டம் மீது அவநம்பிக்கை கொள்ள மக்களைத்தூண்டும். இதை சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

மக்களின் விடுதலைக்கு போராடப் புறப்பட்டவர்கள் நாம். மக்களை மதித்தல், சேவையாற்றுகல், பாதுகாத்தல் ஆகியவை எமது கடமை.

தான்தோன்றித் தனமான முடிவுகளால் விடுதலைப் போராட்டம் பின்தள்ளப்படும். அது எமது இனத்தின் அழிவுக்கு வழிவகுக்கும்.

## சைக்கிள் ஓட்டம்

யாழ்ப்பாணம், நவ. 29

சங்கிலியன் புனர்வாழ்வு முகாம் அகதிகளின் நலனிற்காகவும், செங்குந்தா இந்துக் கல்லூரி அபிவிருத்திக்காகவும் நடத்தப்படும் கலை, கலாசார விளையாட்டு நிகழ்ச்சிகள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

நாளையும், நாளை மறுதினமும் இந்நிகழ்ச்சிகள் நடைபெறும்.

ஆண்கள் சைக்கிள் ஓட்டம், பெண்கள் சைக்கிள் ஓட்டம், 50 வயதுக்கு மேற்பட்டோருக்கான சைக்கிள் ஓட்டம், ஐந்து மைல் மரதன் ஆகியவை விளையாட்டு நிகழ்ச்சிகளில் இடம் பெறுகின்றன. இந்நிகழ்ச்சிகள் நாளை நடைபெறும்.

## இன்று இந்துவில் இறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ். பாடசாலைகளுக்கு இடையில் கல்வித் திணைக்களம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் மூன்றும் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதியாட்டம் இன்று.

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று மாலை 3.15 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறும்.

சுழிபுரம் விக்டோரியா கல்லூரியும் யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயமும் இந்த இறுதி ஆட்டத்தில் மோதுகின்றன.

யாழ்ப்பாணம் பிரதம கல்வி அதிகாரி திரு. ஆர். சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

உடற்பயிற்சிக்குப் பொறுப்பான வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி. கணேசலிங்கம் போட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்.

## மானிப்பாய் இந்து ஸ்கந்தாவை வென்றது

சுன்னாகம், நவ. 29

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற முதலாம் பிரிவு உதைபந்தாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வெற்றிபெற்றுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் மேற்படி சிநேகபூர்வமான ஆட்டம் நடைபெற்றது.

ஸ்கந்தாவின் விளையாட்டு வீரர் ரவீந்திரன் இரண்டு கோல்களைப் பாட்டு சிறப்பாக விளையாடினார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரர்கள் சிவானந்தன், கிருஷ்ணராஜா இருவரும் தலா ஒவ்வொரு கோல் போட்டு ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றனர்.

ஸ்கந்தா வீரர்கள் தவறுதலாகத் தம் பக்கத்திற்கு எதிராக தாமே ஒரு கோல் போட்டதால் போட்டி 3 — 2 ஆக ஸ்கந்தாவுக்கு தோல்வியில் முடிவடைந்தது.

போட்டிக்கு திரு. ஸ்கந்தகுமார் மத்தியஸ்தம் வகித்தார்.

## இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், நவ.29

விடிவு, பாலர் பாடசாலை அமுதம் விமர்சக கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

நல்லூர் வட்டாரக் கல்வி அலுவலர் திரு. க. விநாயகமூர்த்தி கருத்தாங்குக்கு தலைமைவகிப்பார்.

கலாநிதி சி. மௌனகுரு அறிமுக உரை நிகழ்த்துவார்.

திரு. க. இராசநாயகம், திரு. க. சிதம்பரநாதன், திரு. எஸ். சிவலிங்கராசா. திரு. உ. சேரன் ஆகியோர் விமர்சன உரை நிகழ்த்துவர்.

### அச்சுவேலி

அச்சுவேலி. நவ, 29

சோவியத் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் 29ம், 30ம் திகதிகளில் அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்,

இன்றைய கண்காட்சியை கோப்பாய் கல்வி வட்டார கல்வி அதிகாரி ஏ.வி. தங்கராசா ஆரம்பித்து வைப்பார்.

## இராசமாணிக்கம் வீடு எரிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 29

பட்டிருப்புத் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான காலஞ்சென்ற திரு. எஸ். எம். இராசமாணிக்கத்தின் வீடு எரிக்கப்பட்டது.

மகாஓயாவில் வைத்து பௌத்த பிக்கு ஒருவர் கடத்தப்பட்டதன் எதிரொலியாக, வன்செயல்களின் ஒரு கட்டமாகவே மறைந்த திரு. இராசமாணிக்கத்தின் வீடு எரிக்கப்பட்டது.

திரு. இராசமாணிக்கம் பலதடவை பட்டிருப்பு எம். பி. யாகப் பணியாற்றியவர்.

தமிழரசுக் கட்சித் தலைவராகவும் கடமையாற்றியவர்.

மண்டூரில் சைவ ஆலயங்கள் குண்டுகளால் தாக்கப்பட்டு சேதமடைந்தன.

## கொழும்பில் பெரும் தீ

கொழும்பு, நவ.29

கொழும்பு, மருதானையில் தும்புக் கிட்டங்கி ஒன்றில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

நேற்று மாலை ஏற்பட்ட தீ தொடர்ந்து எரிந்ததாகவும், அதனை முற்றாக அணைக்க இரண்டொரு நாட்கள் செல்லும் எனவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெரும் தீ விபத்தினால் தும்பு ஏற்றுமதி செய்யும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு லட்சக்கணக்கான ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

## மண்டூரில் கைதானவர்கள்

மட்டக்களப்பு, நவ. 29

மண்டூரில் நேற்று முன்தினம் பாதுகாப்புப் படையினர் நடத்திய முற்றுகை தேடுதல் வேட்டையின் போது 150 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் எட்டுப் பேரைத் தவிர ஏனையோர் விசாரணையின் பின் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

தடுத்து வைக்கப்பட்ட எட்டுப் பேரும் மேல் விசாரணைக்காக களுவாஞ்சிக்குடி அதிரடிப் படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

## மட்டக்களப்பு வந்தது

மட்டக்களப்பு, நவ. 29

புனானைத் தாக்குதலில் இறந்த செல்லப்பா ரெஜினால்ட் என்பவரின் பிரேதம் வியாழன் மாலை 4-30 மணியளவில் மட்டக்களப்புக்கு கொண்டு வரப்பட்டது.

இறந்த இன்னொருவரான பொன்னையாவின் மரண விசாரணையும் பிரேத பரிசோதனையும் வாழைச்சேனையில் நேற்று நடந்தன.

பின்னர் பிரேதம் சொந்த ஊரான நாவற்குடாவிற்குக் கொண்டு வரப்பட்டது.

பொன்னையாவின் மகனின் பிரேதம் இன்னும் உறவினர்களிடம் கையளிக்கப்படவில்லை.

## ரயில் சேவை நிறுத்தம் இல்லை

கொழும்பு, நவ. 29

இப்போது நடைபெறும் வடக்கு, கிழக்கு ரயில் சேவைகள் நிறுத்தப்பட மாட்டா.

ரயில்வே பகுதி உயர் அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புக் காரணங்கள் கருதி வடக்கு ரயில்கள் அனுராதபுரம் வரைக்கும், கிழக்கு ரயில்கள் பொலனறுவை வரைக்கும் மட்டுமே ஓடும் என்ற வதந்தியை அவர் மறுத்தார்.

இன்னும் சில வாரங்களில் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கான மெயில் ரயில்கள் சேவையில் ஈடுபடக் கூடும் என்றும் அவர் சொன்னார்.

## ஏறுவூரில் கொள்ளை

ஏறுவூர், நவ. 29

ஏறுவூரில் பெற்றோல் நிலையம் ஒன்றில் 25 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை காலை சைக்கிளில் வந்த எட்டு இளைஞர்கள் இக் கொள்ளையை நடத்தினார்கள்.

இதுபற்றி ஏறுவூர் பொலீஸில் முறைப்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

## பலாலி காணி சுவீகரிப்பு கைவிடப்பட வேண்டும்

### மயிலிட்டி பிரஜைகள் குழு கோருகிறது

யாழ்ப்பாணம், நவ 29

பலாலி விமானத்தள விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் சுமார் 500 ஏக்கர் காணியைச் சுவீகரிக்கும் திட்டத்தைக் கைவிடுமாறு மயிலிட்டி பிரஜைகள் குழு அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

சுவீகரிக்கப்படவுள்ள பிரதேசத்தில் சுமார் 450 வீடுகள் அமைந்துள்ளன என்றும் ஏறத்தாழ 2500 பேர் வசிக்கின்றனர் என்றும் 172 கிணறுகளும் 10 குழாய்க்கிணறுகளும் உள்ளன என்றும் தலைவர் திரு. எஸ். சண்முகலிங்கம் அனுப்பியுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

மகஜர் மேலும் கூறுவதாவது:-

"இப்பிரதேசத்தில் உள்ள விவசாயக் காணிகளுக்கு மின்சாரவசதிகள் அளிப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி ரூபா 5 லட்சம் நன்கொடை வழங்கியுள்ளது.

அத்துடன் பலாலி ஆசிரிய கலாசாலை, ஏழு இந்துக் கோயில்கள், ஓர் அரிசி ஆலை ஆகியனவும் இங்கு இருப்பதால் இக் காணிச் சுவீகரிப்பு கல்வி, சமூக, சமய ரீதியாகப் பல கஷ்டங்களை மக்களுக்கு உண்டாக்கும்.

இவ்வாறு மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டு உள்ளது

## பாஸ்போர்ட் விண்ணப்பங்கள் வாரம் இரண்டு தடவை

அச்சுவேலி நவ.29

யாழ் மாவட்ட பாஸ்போர்ட் அலுவலகத்திலிருந்து வாரம் இரு தடவை பாஸ்போர்ட் விண்ணப் பப்படிவங்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

கடந்த காலத்தில் வாரந்தோறும் 400க்கு மேற்பட்ட விண்ணப்பப் படிவங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டன. தற்போது இந்தத் தொகை 200க்கு உட்பட்டதாகக் குறைந்துள்ளது. யாழ் மாவட்ட மோட்டாக [illegible] போக்குவரத்து உதவி ஆணையாளர் பாஸ்போர்ட் அலுவலக அதிகாரியாகவும் கடமை புரிகிறார்.

## பொலிஸ் பொறுப்பேற்ற இந்தியரின் வள்ளம் எங்கே?

### தெரியாது என்கிறார் சார்ஜன்ட்

யாழ்ப்பாணம் நவ. 29

எமது பொறுப்பில் இருந்த இந்திய மீன்பிடி வள்ளத்தை யாழ் மேல் நீதிமன்றத்தில் ஒப்படைக்க முடியவில்லை.

முன்பு ஊர்காவற்றுறை பொலீஸில் கடமைஆற்றிய பொலீஸ் உத்தியோகத்தர் திரு. சுப்பையா பரமேஸ்வரா மேற்கண்டவாறு சாட்சியமளித்தார்.

யாழ் மேல் நீதிமன்றத்தில் ஆர். என் 111 என்ற இலக்கமுடைய இந்திய மீன்பிடி வள்ளத்தை மீள ஒப்படைத்தல் தொடர்பான விசாரணை மேல் நீதிமன்ற நீதிபதி திரு. டீ. ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் நடைபெற்றது.

கணேசன் என்ற இந்திய மீனவர் சார்பில் ஆஜராகியசட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் மேற்படி வள்ளத்தினை அல்லது அதன் பெறுமதியை உரிமையாளருக்குக் கொடுக்குமாறு கோரியதைத் தொடர்ந்தே விசாரணைநடைபெறுகிறது.

யாழ் பொலீஸ் நிலைய சார்ஜன்ட் சுப்பையா பரமேஸ்வராவின் சாட்சியத்தை அரச சட்டத்தரணி திரு. ஐயாத்துரை ஞானதாசன் நெறிப்படுத்தினார்.

சார்ஜன்ட் தனது சாட்சியத்தில் கூறியதாவது:

1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நான் ஊர்காவற்றுறை பொலீஸ் நிலையத்தில் கடமை ஆற்றினேன். அப்போது இன்ஸ்பெக்டர் ஞானப்பிரகாசம் ஊர்காவற்றுறை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்தார். 25 – 12 – 84 இல் அவர் கொலை செய்யப்பட்டார்.

ஆர் என் 111 மீன்பிடி வள்ளம் யாழ் மேல் நீதிமன்றத்தின் பணிப்பின் பேரில் ஊர்காவற்றுறை பொலீஸாரிடம் 15-3-84 இல் ஒப்படைக்கப்பட்டது. இவ்வள்ளம் எவ் 9 என்ற வழக்கில் சான்றுப் பொருள்.

25-11-84 இல் மேலிடத்து உத்தரவைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை பொலீஸ் நிலையம் மூடப்பட்டது. அதைத் தொடர்ந்து கடலில் விடப்பட்ட அவ்வள்ளத்தின் நிலைபற்றிக் கூறமுடியாது இருக்கிறது.

பொலீஸ் நிலைய பொறுப்பு அதிகாரி இன்ஸ்பெக்டர் ஞானப்பிரகாசம் உயிருடன் இல்லாத காரணத்தாலும் உரிய ஆவணங்கள் இல்லாத காரணத்தாலும் வள்ளம் பற்றி எதுவும் கூறமுடியவில்லை.

எதிரிதரப்பு சட்டத்தரணி:

இவ்வள்ளம் எரிந்த நிலையில் இருப்பதாகக் கூறினால் ஏற்பீரா?

சாட்சி:- ஏற்கக் கூடிய நிலையிலோ அல்லது மறுக்கக் கூடிய நிலையிலோ இல்லை.

அடுத்து யாழ்மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் திரு. க. தி. சிவஞானத்தின் சாட்சியத்தை அரச சட்டத்தரணி திரு. ஐ.ஞானதாசன் நெறிப்படுத்தினார். அவர் தனது சாட்சியத்தில் கூறியதாவது:-

"மேற்படி வள்ளம் யாழ் மேல் நீதி மன்றத்தின் பணிப்புரையின் பேரில் ஊர்காவற்றுறை பொலீஸ் நிலையத்திடம் 15-3-84 இல் கையளிக்கப்பட்டது. இச் சான்றுப் பொருள் எமது பொறுப்பில் இல்லாத காரணத்தால் மேல் நீதிமன்றத்தில் ஒப்படைக்க முடியாமல் உள்ளது.

ஊர்காவற்றுறை மீன்பிடி உத்தியோகத்தர் திரு. எஸ். வேலுப்பிள்ளை எனது பணிப்பின் பேரில் அங்கு சென்று இவ்வள்ளத்தைப் பரிசோதித்து அறிக்கை சமர்ப்பித்து உள்ளார்.

இவ்வறிக்கையின் படி இவ் வள்ளத்தின் மேற்பாகம் எரிந்த நிலையிலும் கீழ்ப்பாகம் கடலில் அமிழ்ந்திய நிலையிலும் இருப்பதாக அறிய முடிகிறது" என்றார்.

இக்கட்டத்தில் மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## ரூபவாகினி

வெள்ளிக்கிழமை

(29-11-1985)

| மாலை | |
|---|---|
| 5-00 | செய்திகள் |
| 5-05 | கார்ட்டூன் தொடர் (ஆங்கிலம்) |
| 5-30 | ஆங்கில விவரணம் |
| 6-00 | கயானா– சங்கீத நிகழ்ச்சி |
| 6-15 | தமிழ்விவரணம் |
| 6-30 | செய்திகள் - தமிழ் |
| 6-55 | உங்களுக்கு தெரியுமா? பாடசாலைகள் போட்டி |
| 7-35 | 'அசோகரமாய' |
| 8-00 | செய்திகள்— சிங்களம் |
| 8-30 | யூகோஸ்லேவிய தேசிய தின நிகழ்ச்சி |
| 9-00 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-30 | சர்நாடக சங்கீத அறிமுகம் |
| 9-45 | "ஓ என் அன்புக் குரியவளே!" |
| 10-00 | [illegible] |
| 11-25 | ஒளிபரப்பு முடிவு |

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த - ஷப்ரு உமா எக்ஸ்போர்ட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2–ஆம் ஒழுங்கை மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். வெளியிட்ட திகதி: 29 – 11 – 1985.

சுத்தம், சுகாதாரம், சுவை
இவை அனைத்தையும் அடக்கி உத்தரவாதத்துடன் தயாரித்து விற்பனை செய்பவர்கள்
SENTLS SWEETS
52, CLOCK TOWER ROAD - JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org